(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **64.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஏப்ரல் 05 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ரொசான் ரணசிங்க,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

கௌரவ **நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ ஜகத் குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

**கௌரவ மிலான் ஜயதிலக்க**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

**கௌரவ குலசிங்கம் திலீபன்**

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்**

**கௌரவ எம். எஸ். தௌபீக்**

**கௌரவ ஷான் விஜயலால் த சில்வா**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ சாமர சம்பத் தசநாயக**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ சாரதீ துஷ்மந்த**

**கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய**

**கௌரவ இசுரு தொடன்கொட**

**கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ கயாஷான் நவனந்த**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ ஹரின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ சுதத் மஞ்சுல**

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ வடிவேல் சுரேஷ்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'உண்ணாட்டரசிறை (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளனவென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**II**

"பாராளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்று தொடர்பில் ஒத்திவைப்புவேளையின் போது கேள்விகளைக் கேட்பதற்குச் சந்தப்பமொன்றை வழங்குவதற்குப் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் 2021 மார்ச் 25 வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகப் பாராளுமன்றத்திற்கு அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதன் பிரகாரம், ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணைகளுக்காக ஒதுக்கப்பட்ட நாட்களில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மணித்தியாலயத்தில் இருபது (20) நிமிடங்கள் 'ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகள்' இரண்டினை (02) மாத்திரம் கேட்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒத்திவைப்பு வேளையின் போது கேட்கப்படும் இக்கேள்விகள் பின்வரும் வழிகாட்டல்களின் கீழ் கேட்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்:-

ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்கான வழிகாட்டிகளின் தொகுதி

ஒதுக்கப்பட்ட திகதிகளில் ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்கு இருபது (20) நிமிடங்கள் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையே அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிக்கு தலா ஒவ்வொரு கேள்வி வீதம் மொத்தமாக இரண்டு (02) கேள்விகள் மட்டும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

கேள்வியை எழுப்புவதற்குக் குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு ஐந்து (05) நிமிடங்களும் சம்மந்தப்பட்ட அமைச்சர் கேள்விக்கு விடையளிப்பதற்கு ஐந்து (05) நிமிடங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகள் 'அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்கு' மாத்திரம் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றிற்கு அத்தகைய கேள்வி ஒன்றை (01) மாத்திரம் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகள் அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்தவையா என்னும் விடயம் சபாநாயகரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்வியொன்றை சம்பந்தப்பட்ட முதற்கோலாசானுக்கு பிரத்தியேகமாக அல்லது தொலை நகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்க முடியும். ஆயினும், அத்தகைய கேள்வி சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரால் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்தகைய ஏதேனுமொரு கேள்வியை, கேள்வி கேட்கப்படும் தினத்திற்கு முந்தைய தினம் மு.ப. 10.00 மணிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட முதற்கோலாசான் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு முறையாகத் தெரிவிப்பதற்காக அக்கேள்வியானது, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பாராளுமன்றச் சபை முதல்வரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஒத்திவைப்பு வேளையில் அத்தகைய கேள்விகளுக்கு சபையில் விடையளிப்பதற்காக அவர்களிடம் பாராளுமன்றச் சபை முதல்வரின் செயலாளர் அவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏதேனும் அத்தகைய கேள்விக்கு சபையில் விடையளிப்பதற்கு அல்லது விடையளிக்காமலிருப்பதற்கும் அது விரிவான தகவல்களையும் நீண்ட விடைகளையும் தேவைப்படுத்துமாயின், அதை வாய்மூல விடைக்கான கேள்வியாக பட்டியலிடுமாறு கோருவதற்குமான உரிமையை அமைச்சர் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒத்திவைப்பு வேளையில் ஒரு கேள்வியைக் கேட்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரால் ஏற்கனவே அறிவித்தல் வழங்கிய கேள்வியை மட்டும் கேட்பதற்குத் தன்னை வரையறுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக கேள்வியையும் கேட்கலாகாது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 36 இன் கீழான ஏற்பாடுகள் அவ்வாறே 'ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்கும்' பிரயோகிக்கப்படுதல் வேண்டும்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2021.02.01 முதல் 2021.02.25 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து இவ்வறிக்கையை நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து இவ்வறிக்கைகளை கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான சீதுவை விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை மின்சக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பாராளுமன்ற அமர்வு :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 4.00 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இன்றைய தின பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் வாய்மூல விடைக்கான வினாக்கள் மீதான நடவடிக்கைகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 27 மற்றும் 35 ஆகியவற்றின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு. ப. 11.28 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக” என கௌரவ யதாமிணீ குணவர்தன முன்மொழிய அதனை கௌரவ இஷாக் ரஹுமான் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு கௌரவ அஜித் தராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

“கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக” என வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.35 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக" என காணி அமைச்சர் பிரேரித்தார்..

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.24 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.55 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**5. தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதும்; எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களை செயற்படுத்த அவசியமான திருத்தங்களை முன்மொழிவதும் அவசியமாகவிருப்பதாலும்;

(அ) தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் பொருத்தமான திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும்; மற்றும்

(ஆ) அவற்றிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும்;

பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

2. (அ) அதன் தவிசாளரும் குழு உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும்

(இ) முதலாவது அமர்விற்குப் பின்னர் ஆறு 6மாதங்களினுள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படும் அத்தகையதொரு காலப்பகுதியினுள் குழு பாராளுமன்றத்திற்கு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. அக் குழுவிற்கு —

(அ) குழுவின் கூட்ட நடப்பெண் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கும்;

(ஆ) ஒரு நபரை அதன் முன் ஆஜராகுமாறு அழைக்கவும், ஒரு பத்திரத்தை அல்லது அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு எந்தவொரு நபருக்கும் கட்டளையிடவும் மேற்குறியவற்றை முழுமையாகக் கருத்திற்கொள்ள குழு அவசியமெனக் கருதும் எழுத்துமுல அல்லது வாய்மூல ஆதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவிற்கு உதவுவதற்காக துறை சார்ந்த விசேட அறிவு கொண்ட நபர்கள் மற்றும் சிறப்பு நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்

அதிகாரம் இருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. ஒத்திவைப்பு :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 3.58 மணிக்கு சபாநாயகரால் 2021 ஏப்ரல் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.